(7)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## ஒப்பந்தப்புள்ளி படிவம்

## 1432-ம் பசலிக்கான தரமான அக்மார்க் தேன் சப்ளை

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30-06-2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்கவேண்டிய ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | பொருளின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | நல்ல தரமான சுத்தமான அக்மார்க் தரச்சான்று மற்றும் FSSAI தர்த்துடன் பெற்ற தேன் சப்ளை செய்ய கிலோ ஒன்றுக்கு விலை | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.

2.ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை **(PAN CARD)& GST** சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

**1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் தயார் செய்ய நல்ல தரமான அக்மார்க் தேன் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.**

1. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய 1432-ம் பசலிக்கு இத்திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயார் செய்யத்தேவையான நல்ல தரமான சுத்தமான தேன் அக்மார்க் தரச்சான்று பெற்ற நிறுவனங்களிடமிருந்து சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022ம் தேதி பிற்பகல் 3.00 மணிஅளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

பஞ்சாமிர்தம் தயார் செய்யத்தேவையான நல்ல தரமான சுத்தமான தேன் அக்மார்க் தரச்சான்று பெற்ற நிறுவனங்களிடமிருந்து சப்ளை செய்வதல்.

**விலை குறிப்பிடுவதற்கான விபரம்**

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் கிலோ ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி விலையினை எண்ணாலும் மற்றும் எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் வருமான வரி, விற்பனை வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேற்படி வரித்தொகைஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒவ்வொரு பட்டியலிலும் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக ஒப்பந்தப்புள்ளிதாரரின் முழு முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1. ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக **ரூ.2,00,000/-** (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) " இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான **ரூ.2,00,000/-**க்கான (ரூபாய் இரண்டு இலட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3. ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் (PAN CARD)& GST சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளியுடன் ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432-ம் பசலி முழுவதும் சப்ளை செய்வதாக இருக்கும் நல்ல தரமான தேன் 1/2-கிலோ அளவு பாக்கெட்டுகள் இரண்டும், தரச்சான்றிதழும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மாதிரி மற்றும் தரச்சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் வங்கி வரைவோலை விவரம், சால்வன்சி விவரம் அடங்கிய பட்டியல் இணைக்க வேண்டும்.

6. வருடம் ஒன்றுக்கு தேன் விற்பனையில் வரவு செலவு செய்ததற்காக வருமான வரித்துறையில் தாக்கல் செய்த **Balance Sheet** பட்டய கணக்கரால் **(Chartered Accountant)** மேலொப்பம் **(Attested)** செய்யப்பட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்கப்பட வேண்டும். மேலும் வருமான வரி செலுத்தியதற்கு **(Income Tax)** சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளிதாரர் தேன் விற்பனையில் குறைந்தது 3 ஆண்டுகளாவது வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிமச் நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டாயம் இணைக்க வேண்டும்.

8. ஒப்பந்ததாரர் 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். இதற்கான சான்றாக கல்விச்சான்று, பிறப்பு சான்று, வாக்காளர் அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், ஆதார்அட்டை போன்ற ஆவணங்களில் ஏதாவது ஒன்றின் நகலினை சான்றாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

9. மேற்காணும் வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

10. ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

11. பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான காலத்தில் ஒப்பந்தப்புள்ளியுடன் கொடுத்த மாதிரிப்படியே தேன் தங்குதடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்கும் தேன் ஒப்பந்தப்புள்ளியுடன் கொடுத்த மாதிரியைவிட தரம் குறைவாக இருப்பின் அதனை நிராகரிக்க சம்பந்தப்பட்ட அலுவலருக்கு உரிமையுண்டு.

12. "ஐயப்ப சீசன், தைப்பூசம்" , " பங்குனி உத்திரம்" மற்றும் விசேட காலங்களில் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளர் வழங்கும் கொள்முதல் கேட்பு சீட்டு அளவின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான அளவு சப்ளை செய்ய வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் நல்லதரமான, தேன் 25கிலோ அளவில் உணவு பொருட்களை அடைக்கும் தரம் வாய்ந்த கேன்களில் அடைத்து பஞ்சாமிர்தம் தயார் செய்யப்படும் இடத்திற்கு தனது சொந்தப் பொறுப்பிலும் மற்றும் செலவிலும் கொண்டு சென்று பொறுப்பாளர் முன்னிலையில் எடைபோட்டு வழங்கப்பட வேண்டும். சப்ளை செய்யப்படும் தேன் கேன்களின் மேல் சப்ளை செய்யும் நிறுவனத்தின் பெயர், எடை, சப்ளை செய்யப்படும் பொருளின் பெயர், பேக்கிங் செய்த தேதி, Batch No, ஆகிய விவரங்கள் அடங்கிய லேபிள்கள் ஒட்டப்பட வேண்டும்.

/3/

14. சப்ளை செய்வதற்கான பட்டியல் தொகைப்பெற நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்த தாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தங்குதடையின்றி சப்ளை செய்யப்பட வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே தொகைக்கே தொடர்ந்து தேன் சப்ளை செய்ய வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்டெண்டர் விடவோ கூடாது.

16. ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்கும் உட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

17. பஞ்சாமிர்தப்பிரிவிற்குத் தேவையான தேன் தேவையான காலங்களில் குறிப்பிட்ட காலத்திற்குள் தேவைக்கேற்ப சப்ளை செய்யாவிட்டால் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படி ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

18. ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படின் அல்லது தேவையான அளவிற்கு உரிய காலத்தில் வழங்கிடத்தாமதம் செய்தாலும், இத்திருக்கோயிலுக்குத் தேவையான தேன் வெளி சந்தையிலோ, கூட்டுறவு அங்காடியிலோ , விலைப்புள்ளிகள் மூலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி மூலமோ கொள்முதல் செய்யப்படும். இதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் அந்த இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும். தவறினால், ஒப்பந்த பத்திர நிபந்தனைகளின் படியும், ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படியும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

19. சப்ளை செய்யப்படும் தேனிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா? என பரிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப்பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

20. எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

21. ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

22. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலித்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை இரண்டாவது குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.

23. ஆணையரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரா் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவா்களுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

24. பசலி 1432க்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று தேன் சப்ளை செய்த வகையில் தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் வைப்புத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

25. ஒப்பந்தப்புள்ளிதாரா் வணிகவரித்துறையினரிடமிருந்து உரிய உரிமம் பெற்றிருக்க வேண்டும். தேன் சப்ளை செய்வதற்காக கொண்டு வரப்படும் சமயத்தில் வணிக வரித்துறையினரால் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவற்றிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரரே தனது சொந்தப் பொறுப்பில் தீா்வு காணவேண்டும்.

26. சப்ளை செய்யப்படும் காலத்தில் விரிவிகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும் ஒப்பந்தப்புள்ளி ரேட்டிற்கே தேன் ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்தப்புள்ளிதாரா் சப்ளை செய்ய வேண்டும்.

27. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

28. மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவா்களையோ, இந்துக்கள் அல்லாதவா்களையோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

29. ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையா் / செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

30. திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக ஒப்பந்தத்தை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவா்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்தும், தெரிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாகவே கருதப்படுவார்கள்.

31. திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவா்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவா்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவா்கள் மற்றும் அவா்களின் வாரிசதாரா்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாா்கள்.

32. டெண்டா் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டா் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையா்/ செயல் அலுவலா் அவா்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

33. ஒருவா் கொடுத்த டெண்டா் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டாா் என்று இணை ஆணையா்/செயல் அலுவலா் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையா்/ செயல் அலுவலா் அவா்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

34. இதர நிபந்தனைகள் டெண்டா் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையா்/செயல் அலுவலா்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளா் 20/5/2022

30/5/22